# Tnpsc Model Question Paper 21 – General Studies in Tamil

Click Here to Download More Tnpsc Model Questions

1. கூற்று A : பி.ஆர்.அம்பேத்கர் மஹத் சத்தியாகிரகத்தைத் தொடங்கினார்
காரணம் (R): இவர் இந்துக்கள் மற்றும் முஸ்லீம்களை ஒருங்கிணைக்க முயன்றார்
(அ) (A) கூற்று சரி (R) காரணம் கூற்றை விளக்குகிறது
(ஆ) (A) கூற்று சரி (R) காரணம் கூற்றை விளக்கவில்லை
**(இ) (A) கூற்று சரி (R) காரணம் தவறு**
(ஈ) (A) கூற்று தவறு (R) காரணம் சரி

2. அலிபூர் குண்டு வெடிப்பு வழக்கில் அரவிந்த கோஷ்க்காக வழக்கை வாதாடியவர்
**(அ) C.R.தாஸ்** (ஆ) மோதிலால் நேரு (இ) புலாபாய் தேசாய் (ஈ) பிபின் சந்திர பால்

3. புகழ் பெற்ற மேற்கோளான "நீண்ட ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் விதியுடன் முயற்சி செய்தோம்" யாரால் வழங்கப்பட்டது?
(அ) டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கார் **(ஆ) ஜவஹர்லால் நேரு**
(இ) மகாத்மா காந்தி (ஈ) அபுல்கலாம் ஆசாத்

4. கி.பி. 1961–ம் ஆண்டு மெட்ராஸ் நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் நில உச்சவரம்பு என்ன?
**(அ) 30 நிலையான ஏக்கர்** (ஆ) 50 நிலையான ஏக்கர்
(இ) 40 நிலையான ஏக்கர் (ஈ) 55 நிலையான ஏக்கர்

5. 1. வங்காளம் மற்றும் பீகாரில் பிரிட்டிஷ் ஆட்சி நிறுவப்பட்டதால் உள்நாட்டுக் கிளர்ச்சிகள் தொடங்கின. மேலும் அவை காலனித்துவ ஆட்சியில் ஒன்றன்பின் ஒன்றாக இணைக்கப்பட்டதால் அவை நிகழ்ந்தன.
2. நூற்றுக்கணக்கான சிறிய கிளர்ச்சிகளைத் தவிர நாற்பதுக்கும் மேற்பட்ட பெரிய கிளர்ச்சிகள் நடந்தன.
மேலே காணப்படும கூற்றுகளில் சரியானது/வை எது/எவை?
(அ) 1 மட்டும் (ஆ) 2 மட்டும்
**(இ) 1 மற்றும் 2 ஆகியன** (ஈ) மேற்கண்ட எவையுமில்லை

6. 1932ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17ஆம் நாள் வகுப்புவாத கொடையை அறிவித்த பிரிட்டிஷ் பிரதம மந்திரி யார் என்பதைக் குறிப்பிடவும்.
**(அ) ராம்சே மெக்டொனால்ட்** (ஆ) லாய்ட் ஜார்ஜ்
(இ) ஸ்டான்லி பால்டுவின் (ஈ) A.V.அலெக்ஸாண்டர்

7. பின்வரும் பட்டியல் I–ஐ பட்டியல் II உடன் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க:

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| அ. வினோபா பாவே | 1. போலிஸ் நடவடிக்கை |
| ஆ. நேதாஜி | 2. நாவகாளி |
| இ. ஐதராபாத் நிஸாம் | 3. சத்தியாகிரகி |
| ஈ. காந்திஜி | 4. ஆசாத் இந்து பாஜ் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ.** | **3** | **4** | **1** | **2** |
| ஆ. | 1 | 4 | 3 | 2 |
| இ. | 4 | 3 | 2 | 1 |
| ஈ. | 2 | 1 | 4 | 3 |

8. நவீன தமிழகத்தில் தோன்றிய முதல் சமூக சீர்திருத்தவாதியாகக் கருதப்படுபவர் யார்?
(அ) வள்ளலார் **(ஆ) வைகுண்ட சுவாமிகள்** (இ) பெரியார் (ஈ) அயோத்தி தாசர்

9. பின்வருவனவற்றுள் எவை, 1806ஆம் ஆண்டு நடைபெற்ற வேலூர் சிப்பாய் கலகத்திற்கான காரணங்கள் ஆகும்?
(அ) மிருகங்களின் கொழுப்பு பூசப்பட்ட தோட்டாக்கள், குறைவான சம்பளம், புதிய வகை தலைப்பாகை, சாதிக்குறியீடுகள் மற்றும் காதணிகள், சுத்தமாக தாடையை மழித்தல்
(ஆ) பதவி உயர்வின்மை, கடினமாக தண்டனை, குறைவான சம்பளம், புதியவகை தலைப்பாகை, சுத்தமாக தாடையை மழித்தல்
(இ) மிருகங்களின் கொழுப்பு பூசப்பட்ட தோட்டாக்கள், பதவி உயர்வின்மை, புதிய வகை தலைப்பாகை, குறைவான சம்பளம், சுத்தமாக தாடையை மழித்தல்
**(ஈ) பதவி உயர்வின்மை, குறைவான சம்பளம், புதிய வகை தலைப்பாகை, சாதிக்குறியீடுகளை மற்றும் காதணிகள், சுத்தமாக தாடையை மழித்தல்**

10. சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட எழுத்து வடிவத்தின் பெயர் யாது?
(அ) கரோஷ்தி (ஆ) தேவநாகரி **(இ) தமிழ்ப்–பிராமி** (ஈ) கிரந்தம்

11. திருக்குறள் நம் இலக்கியங்களில் தலைசிறந்த ஒன்று, வாழ்க்கை நெறிமுறைகள், சமூகம், அரசியல், பொருளாதாரம் மற்றும் கல்வி போன்ற அனைத்து வினாக்களுக்கும் விடை அளிக்கிறது. மிகவும் பிரபலமான திருக்குறள் பல மொழிகளில் உலகளவில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.
பின்வருவனவற்றில் எது சிறப்பாக பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.
**(அ) அனைத்து வினாக்களுக்குமான பதில்களின் தொகுப்பாகத் திருக்குறள் உள்ளது.**
(ஆ) திருக்குறள் ஒரு சமயநூல்
(இ) திருக்குறள் ஓர் உரைநடை
(ஈ) திருக்குறள் ஓர் அறிவுசார்ந்த தொகுப்பு

12. பின்வருவனவற்றுள் எந்த அரசியல் கட்சி தமிழகத்தில் ஆரம்பக் கல்வியில் இருபாலர் கல்வி முறையை அறிமுகப்படுத்தியது?
(அ) திராவிட முன்னேற்ற கழகம்
(ஆ) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம்
(இ) திராவிட கழகம்
**(ஈ) நீதிக்கட்சி**

13. ஈ.வே.ராமசாமியின் ஈரோட்டு திட்டம் கீழ்கண்டவைகளில் எதை கொண்டிருந்தது?
1. அனைவருக்கும் ஆயள் காப்பீட்டு திட்டத்தை விரிவுபடுத்துதல்.
2. அனைவருக்கும் கட்டாய இலவசக்கல்வி அளித்தல்.
3. தீண்டாமை ஒழிப்பு.
4. அத்தியாவசிய தொழிலகளை நாட்டுடமை ஆக்குதல்
(அ) 1 மட்டும் (இ) 2 மட்டும் (இ) 1, 2 மட்டும் **(ஈ) 1, 2, 3, 4**

14. "குடியரசு" நாளிதழை வெளியிட்டவர் யார்?
**(அ) பெரியார்** (ஆ) அண்ணா (இ) சிங்கார வேலர் (ஈ) E.V.K.சம்பத்

15. "இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ் தம் என்றாலும் வேண்டேன்"
என்ற பாடல் வரிகள் இடம்பெறும் தூது நூல் எது
(அ) காக்கை விடு தூது **(ஆ) தமிழ் விடு தூது**
(இ) நெஞ்சு விடு தூது (ஈ) மேக விடு தூது

16. மணிமேகலைக்கு அமுதசுரபி என்ற அட்சய பாத்திரம் எங்கே கிடைத்தது?
(அ) உவவனம் **(ஆ) மணி பல்லவத்தீவு**
(இ) காவிரிப்பூம்பட்டினம் (ஈ) வஞ்சி மாநகர்

17. "பூ மடந்தை வாழப் புவிமடந்தை வீற்றிருக்க
நாமடந்தை நூல் வாக்கும் நாள்"

winmeen.com

என்று வாணிதாசன் யார் இறந்ததை எண்ணிப் பாடியுள்ளார்?

**(அ) கம்பர்** (ஆ) கண்ணதாசன் (இ) அண்ணாதுரை (ஈ) கலைஞர்.மு.கருணாநிதி

18. "புதிய தரிசனங்கள்" என்ற நூலுக்கு சாகித்திய அகாடெமி விருது பெற்றவர் யார்?

(அ) பிரபஞ்சன் (ஆ) அசோகமித்திரன் (இ) இராஜம்கிருஷ்ணன் **(ஈ) பொன்னீலன்**

19. "நீரின்றி அமையாது உலகு"
என்று திருக்குறளுக்கு முன்பே கூறிய நூல் எது?

(அ) பரிபாடல் **(ஆ) நற்றிணை** (இ) குறந்தொகை (ஈ) தொல்காப்பியம்

20. மதுரைக்காஞ்சி எந்த நில மக்களின் வாழ்வியலைக் கூறுகிறது?

(அ) குறிஞ்சி (ஆ) முல்லை **(இ) மருதம்** (ஈ) நெய்தல்

21. சங்கப்புலவர்கள் தங்கள் கவிதைகளை எங்கே வகைப்படுத்தினர்?

**(அ) மதுரை** (ஆ) திருச்சி (இ) கரூர் (ஈ) பூம்புகார் பட்டினம்

22. "புலம் மிக்கவரைப் புலமை தெரிதல்
புலம் மிக்கவர்க்கே புலனாம்"
என்ற அடிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

(அ) நாலடியார் (ஆ) நான்மணிக்கடிகை (இ) திருக்குறள் **(ஈ) பழமொழி**

23. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டம் (MGNREGA) முதன் முதலில் தொடங்கப்பட்ட ஆண்டு

(அ) 2005 **(ஆ) 2006** (இ) 2008 (ஈ) 2009

24. தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டமானது ------------ அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது

(அ) Dr.மு.கருணாநிதி **(ஆ) Dr.M.G.ராமச்சந்திரன்**
(இ) Dr.ஜெ.ஜெயலலிதா (ஈ) திரு.C.N.அண்ணாதுரை

25. தமிழ்நாட்டில் "பின்னலாடை நகரம்" என்று அழைக்கப்படுவது எது?

(அ) கோயம்புத்தூர் (ஆ) ஈரோடு **(இ) திருப்பூர்** (ஈ) சிவகாசி

26. கோயம்புத்தூர், தென் இந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படுவதன் காரணம் என்ன?

(அ) அதிய எண்ணிக்கையிலான மின் மோட்டார்கள் உற்பத்தி செய்யப்படுவதால்
**(ஆ) அதிக எண்ணிக்கையிலான துணி ஆலைகள் செயல்படுவதால்**
(இ) அதிக கல்வி நிறுவனங்கள் உள்ளதால்
(ஈ) அதிக அளவிலான நகை உற்பத்தி நிறுவனங்கள் உள்ளதால்

27. "ஆசியாவின் டெட்ராய்ட்" என்று சென்னை ஏன் அழைக்கப்படுகிறது?

(அ) ஜவுளித் தொழிலால் **(ஆ) மோட்டார் வாகனத் தொழிலால்**
(இ) தோல் தொழிலால் (ஈ) திரைப்படத் தொழிலால்

28. 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின் படி தமிழ்நாட்டில் மக்கள் தொகை அடர்த்தி

(அ) 384 per sq.kilo meter (ஆ) 425 per sq.kilo meter
**(இ) 555 per sq.kilo meter** (ஈ) 561 per sq.kilo meter

29. பன்முக ஏழ்மை குறியீட்டை அளவிடும் முறை ---------- ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது

**(அ) சுகாதாரம், கல்வி மற்றும் வாழ்க்கைத் தரம்** (ஆ) கல்வி மற்றும் சுகாதாரம்
(இ) சத்துணவு மற்றும் நீள்வாழ்வு (ஈ) தேசிய வருமானம், பணக்காரர்

30. தமிழ்நாடு மாநில மனித மேம்பாட்டு அறிக்கை 2017இன் படி ---------- மாவட்டம் முதல் இடத்தில் இருக்கின்றது

**(அ) கன்னியாகுமரி** (ஆ) அரியலூர் (இ) காஞ்சிபுரம் (ஈ) சென்னை

31. தமிழ்நாட்டில் ------- நாள் பொது மக்களின் குறைகளை நீக்கும் நாள்
(அ) ஒவ்வொரு புதன்கிழமை (ஆ) ஒவ்வொரு வெள்ளிக்கிழமை
(இ) ஒவ்வொரு சனிக்கிழமை **(ஈ) ஒவ்வொரு திங்கள்கிழமை**

32. தற்பொழுது உள்ள நிலவரப்படி தமிழ்நாட்டில் ------ பாசனம் அதிக அளவில் உள்ளது.
(அ)அணைக்கட்டுகள் பாசனம் **(ஆ) கிணறுகள் பாசனம்**
(இ) குழாய் கிணறுகள் பாசனம் (ஈ) கால்வாய்கள் பாசனம்

33. ஒரு டஜன் வாழைப்பழத்தின் விலை ரூ.20 எனில் ரூ.100க்கு வாங்கப்படும் வாழைப்பழங்களின் எண்ணிக்கை
(அ) 5 (ஆ) 12 (இ) 20 **(ஈ) 60**

34. p= 8, 000 ரூ., ஆண்டு வட்டி வீதம் r=5%, n=3 ஆண்டுகள் எனில், கூட்டு வட்டிக்கும், தனிவட்டிக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை காண்க:
**(அ) ரூ.61** (ஆ) ரூ.661 (இ) ரூ.1061 (ஈ) ரூ.1261

35. $A=2^{65}$ மற்றும் $b=2^{63} + 2^{63} + 2^{62} + .. + 2^{0}$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது.
பின்வருவனவற்றில் எது உண்மை?
(அ) B ஆனது A–ஐ விட 1 அதிகம் (ஆ) B ஆனது A–ஐ விட $2^{64}$அதிகம்
(இ) A மற்றும் B சமம் **(ஈ) A ஆனது B–ஐ விட 1 அதிகம்**

36. 13ஆல் வகுபடும் ஈரிலக்க எண்களின் எண்ணிக்கையைக் காண்க:
(அ) 6 **(ஆ) 7** (இ) 8 (ஈ) 9

37. ஒரு கடிகாரம் ஒரு மணிக்கு ஒரு முறை, 2 மணிக்கு இரு முறை, 3 மணிக்கு மூன்று முறை என்றவாறு தொடர்ந்து சரியாக ஒவ்வொரு மணிக்கும் ஒலி எழுப்பும் எனில், ஒரு நாளில் அக்கடிகாரம் எத்தனை முறை ஒலி எழுப்பும்?
(அ) 78 **(ஆ) 156** (இ) 234 (ஈ) 312

38. 5 1 4 7 3 9 8 5 7 2 6 3 1 5 8 6 3 8 5 22 4 3 4 9 6
இத்தொடர் வரிசையில் ஒரு ஒற்றை எண்ணைத் தொடரும் எத்தனை ஒற்றை எண்கள்
(அ) 1 (ஆ) 2 (இ) 3 **(ஈ) 4க்கு மேல்**

39. ஒரு தெருவில் உள்ள வீடுகளுக்கு 1 முதல் 49 வரை தொடர்ச்சியாக கதவிலக்கம் வழங்கப்பட்டுள்ளது. செந்திலின் வீட்டிற்கு முன்னதாக உள்ள வீடுகளின் கதவிலக்கங்களின் கூட்டுத்தொகையானது செந்திலின் வீட்டிற்குப் பின்னதாக உள்ள வீடுகளின் கதவிலக்கங்களின் கூட்டுத் தொகைக்குச் சமம் எனில் செந்திலின் வீட்டு கதவிலக்கத்தைக் காண்க:
**(அ) 35** (ஆ) 25 (இ) 30 (ஈ) 20

40. ஒரு நபர் ஒவ்வோர் ஆண்டும் அதற்கு முந்தைய ஆண்டு சேமித்த தொகையில் பாதியைச் சேமிக்கிறார். 6 ஆண்டுகளில் அவர் ரூ.7875ஐ சேமிக்கிறார் எனில், முதல் ஆண்டில் அவர் சேமித்த தொகை எவ்வளவு?
(அ) ரூ.3, 800 (ஆ) ரூ.3, 725 **(இ) ரூ.4, 000** (ஈ) ரூ.4, 200

41. ஒரு சமவாய்ப்பு சோதனையில் A என்ற ஒரு நிகழ்ச்சியில் P(A) : P(A) = 17 : 15 மற்றும் n(s) = 640 என்றவாறு கொடுக்கப்பட்டுள்ளது எனில் n (A) காண்க:
(அ) 320 **(ஆ) 340** (இ) 305 (ஈ) 310

42. A–யும் B–யும் சேர்ந்து ஒரு வேலையை 4 நாட்களில் முடிப்பர். A மட்டும் தனியாக அவ்வேலையை 12 நாட்களில் முடிப்பார் எனில் B மட்டும் தனியாக அவ்வேலையை எத்தனை நாட்களில் முடிப்பார்?
(அ) 4 நாட்கள் (ஆ) 5 நாட்கள் **(இ) 6 நாட்கள்** (ஈ) 7 நாட்கள்

winmeen.com

43. X, Y மற்றும் Z ஆகியோர் ஒரு வேலையை முறையே 4, 6 மற்றும் 10 நாட்களில் முடிப்பர். மூவரும் ஒன்று சேர்ந்து அந்த வேலையை முடித்தால் அவர்களுக்கு ரூ.31, 000 வழங்கப்படும் எனில் X, Y மற்றும் Z தனித்தனியேப் பெறும் பங்குகள் காண்க?
(அ) 6, 000 ; 10, 000 ; 15, 000 (ஆ) 10, 000 ; 6, 000 ; 15, 000
(இ) 10, 000 ; 15, 000 ; 6, 000 **(ஈ) 15, 000 ; 10, 000 ; 6, 000**

44. ஒரு பாத்திரத்தின் கனஅளவு 1440 மீ$^3$. அப்பாத்திரத்தின் நீளம் மற்றும் அகலம் முறையே 15 மீ மற்றும் 8 மீ எனில் அதன் உயரத்தைக் காண்க:
(அ) 23 மீ (ஆ) 7 மீ **(இ) 12 மீ** (ஈ) 40 மீ

45. ஒரு திண்ம அரைக்கோளத்தின் அடிப்பரப்பு 1386 சதுர மீட்டர் எனில், அதன் மொத்தப் புறப்பரப்பைக் காண்க:
(அ) 1386 ச.மீ$^2$ **(ஆ) 4158 ச.மீ$^2$** (இ) 2772 மீ$^2$ (ஈ) 5544 ச.மீ

46. ஒரு பகடை உருட்டப்படும் பொழுது பகடையின் முக எண். பகா எண்ணாக இருக்க நிகழ்தகவு யாது?
(அ) 1 **(ஆ) 1/2** (இ) 2/3 (ஈ) 0

47. ரூ.10, 000க்கு 8% ஆண்டு வட்டி வீதம் எனில், இரண்டு ஆண்டுகளில் கிடைக்கும் கூட்டு வட்டிக்கும் தனிவட்டிக்கும் உள்ள வித்தியாசம்.
**(அ) ரூ.64** (ஆ) ரூ.68 (இ)ரூ.70 (ஈ) ரூ.72

48. கடனாக வழங்கப்பட்ட அசல் ரூ.48, 000க்கு 2 ஆண்டுகள் 3 மாதக் காலத்திற்குப் பின் தனிவட்டி மூலம் பெறப்பட்ட மொத்தத் தொகை ரூ.55, 560 ஆக இருந்தது எனில், வட்டி வீதத்தை காண்க:
(அ) 5% (ஆ) 6% **(இ) 7%** (ஈ) 8%

49. ஒரு சாதாரண ஆண்டுக்கு 8% வட்டி வீதத்தில் ரூ.900க்கு 73 நாட்களுக்கு கிடைக்கும் தனிவட்டி காண்க:
**(அ) ரூ.14.40** (ஆ) ரூ.15.50 (இ) ரூ.15.40 (ஈ) ரூ.14.50

50. எனது மகிழுந்தில் 25 லிட்டர் பெட்ரோல் கொண்டு 150 கி.மீ போக முடியும் எனில் 30 லிட்டர் பெட்ரோலில் பயணிக்கப்படும் தூரம்
(அ) 160 கி.மீ **(ஆ) 180 கி.மீ** (இ) 200 கி.மீ (ஈ) 210 கி.மீ

51. 15/25 = X/5 = 18/Y எனில் X மற்றும் Y–ன் மதிப்புகள்
**(அ) 3, 30** (ஆ) 3, 35 (இ) 5, 30 (ஈ) 5, 35

52. $(5x-10)$, $(5x^2-20)$ இவற்றின் மீ.பொ.ம
**(அ) $5(x+2)(x-2)$** (ஆ) $25(x+2)(x-2)$ (இ) $25(x-2)^2(x+2)$ (ஈ) $5(x-2)^2(x+2)$

53. $(x^4-1)$, $(x^2-2x+1)$ இவற்றின் மீ.பொ.ம
(அ) $(x-1)(x+1)(x^2+1)$ **(ஆ) $(x^2+1)(x+1)(x-1)^2$** (இ) $(x^2+1)(x-1)^3(x+1)$ (ஈ) $(x^2+1)(x-1)$

54. 11, 0.121 மற்றும் 0.131–ன் மீ.பொ.வ காண்க:
(அ) 11 (ஆ) 0.11 (இ) 0.011 **(ஈ) 0.0011**

55. $x^3+x^2-x+2$ மற்றும் $2x^3-5x^2+5x-3$ ஆகிய பல்லுறுப்புக் கோவைகளின் மீ.பொ.வ. காண்க:
(அ) $x+2$ (ஆ) $2(x^3+x^2-x+2)$ (இ) $-7(x^2-x+1)$ **(ஈ) $x^2-x+1$**

56. சதவீதத்தில் மாற்றுக: 2 லிட்டரில் 200 மி.லி
**(அ) 10%** (ஆ) 2% (இ) 20% (ஈ) 100%

57. $x/y = 6/5$ எனில் $x^2+y^2/x^2-y^2$ ன் மதிப்பு காண்க:

(அ) 61/25 (ஆ) 25/11 **(இ) 61/11** (ஈ) 36/25

58. மன நிலைமம், தன்முனைப்பு இவையிரண்டும் ----------ன் தீங்கு விளைவிக்கும் குறைபாடுகள்
(அ) பொதுமைப்படுத்துதல் (ஆ) அறிவியல் முறை
(இ) தூண்டல் சிந்தனை **(ஈ) அனுபவ சிந்தனை**

59. அழுத்தச் சமைப்பானின் நீரின் கொதிநிலை வெப்பநிலை T என்க. அப்போது,
(அ) T=80$^{\circ}$ C (ஆ) T=90$^{\circ}$ C (இ) T = 100$^{\circ}$ C **(ஈ) T > 100$^{\circ}$ C**

60. சைட்டோபிளாசத்தின் கூழ்நிலைப்பொருள் வளைந்து வளைந்து செல்லும் நகர்வின் பெயர்
(அ) ஸ்டீரிமிங் நகர்வு (ஆ) அமீபாய்டு நகர்வு
**(இ) ப்ரௌணியன் நகர்வு** (ஈ) இவை எதுவும் இல்லை

61. கூற்று: ஒரு குளிர்சாதன பெட்டி, குறைவான வெப்பநிலையிலிருந்து அதிகப்படியான வெப்ப நிலைக்கு வெப்பத்தை கடத்துகிறது.
காரணம்: எந்த ஒரு புற வேலையும் செய்யாமல் சாதாரணமாக வெப்பம் குறைந்த வெப்பநிலையிலிருந்து அதிக வெப்பநிலைக்கு கடத்த முடியாது.
(அ) கூற்று சரி காரணம் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்
**(ஆ) கூற்று மற்றும் காரணம் சரி ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல**
(இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு
(ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

62. உயிர் ஒரு இயற்பியல் வேதியியல் தொகுப்பு. இவ்வுயிரி கொடுக்கப்பட்டகைளில் எதை வெளிப்படுத்துகிறது?
(அ) இனப்பெருக்கம் (ஆ) உறுத்துணர்ச்சி
(இ) இடப்பெயர்ச்சி **(ஈ) இவை அனைத்தும்**

63. தளர்வான மூடியுடைய சாதாரணப் பானையில் உணவு சமைப்பதை விட அழுத்தச் சமையற்கலனில் விரைவாக சமைக்கப்படுகிறது ஏனெனில் அதிக அழுத்தம்
(அ) உணவின் மீது வெப்பத்தை விரைவாகச் செலுத்தும்
(ஆ) நீரின் கொதிநிலையைக் குறைக்கும்
**(இ) நீரின் கொதிநிலையை அதிகரிக்கும்**
(ஈ) நீரின் தன் வெப்ப ஏற்புத்திறனை அதிகரிக்கும்

64. நம் உடலின் ஒருங்கிணைந்த செயல்பாட்டுக்கும், கட்டுப்பாட்டிற்கும் காரணமான மண்டலம்
(அ) இரத்த ஓட்ட மண்டலம் (ஆ) இனப்பெருக்க மண்டலம்
(இ) சீரண மண்டலம் **(ஈ) நரம்பு மண்டலம்**

65. ஒரு முழுமையான கரும்பொருள் என்பது
(அ) முழுவதும் கருப்பு நிறத்திலானது
(ஆ) அதன் அனைத்து ஆற்றலையும் கதிர்வீச்சு முறையில் வெளியிடும்
(இ) லட்சிய வாயுவால் ஆனது
**(ஈ) அதன் மேல்படும் அனைத்து கதிர்வீச்சுக்களையும் கிரகித்துக் கொள்ளும்**

66. ---------- பரப்பளவில் இரண்டாவது பெரிய இந்திய மாநிலமாகும்
(அ) தமிழ்நாடு (ஆ) உத்திரப்பிரதேசம் (இ) மேற்கு வங்காளம் **(ஈ) மத்தியப்பிரதேசம்**

67. மனிதனை ஏற்றிச் செல்லும் முதல் ராக்கெட் விகாஸ் இன்ஜினை இஸ்ரோ வெற்றிகரமாகச் சோதித்த இடம் (ககன்யான் மனித விண்வெளிப்பயணதிட்டம்) -------- ஆகும்
**(அ) மகேந்திரகிரி–தமிழ்நாடு** (ஆ) கல்பாக்கம்–தமிழ்நாடு
(இ) கூடங்குளம்–தமிழ்நாடு (ஈ) நரிமணம்–தமிழ்நாடு

68. சுற்றுச்சூழல் பாதுகாப்பு வழிமுறைக்கான "மீண்டும் மஞ்சப்பை" திட்டம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட நாள்

(அ) 15 டிசம்பர் 2021 (ஆ) 20 டிசம்பர் 2021 (இ) 25 டிசம்பர் 2021 **(ஈ) 23 டிசம்பர் 2021**

69. சிறார் நீதிச் சட்டத்தில் அதிகபட்ச தண்டனை யாவை?

(அ) ஆயள்தண்டனை அல்லது 11 ஆண்டுகள் மற்றும் அபராதம்

(ஆ) 10 ஆண்டுகள் வரை சிறை தண்டனை அல்லது அபராதம்

**(இ) ஆயள்தண்டனை அல்லது 10 ஆண்டுகள் மற்றும் அபராதம்**

(ஈ) ஆயள்தண்டனை அல்லது 8 ஆண்டுகள் மற்றும் அபராதம்

70. கல்கத்தாவிலிருந்து டெல்லியை பிரிட்டிஷ் இந்தியாவின் தலைநகரமாக மாற்றப்பட்ட ஆண்டு

(அ) 1907 **(ஆ) 1911** (இ) 1912 (ஈ) 1913

71. பின்வருவனவற்றில் எது தவறாக இணைக்கப்பட்டுள்ளது?

1. CACP – விவசாய செலவு மற்றும் விலை குழு
2. ICDS – ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டு சேவைகள்
3. NFSA – தேசிய உணவு பாதுகாப்பு சங்கம்
4. MDM – மதிய நாள் பணி

(அ) 1 மற்றும் 2 மட்டும் (ஆ) 1 மற்றும் 3 மட்டும்

(இ) 2 மற்றும் 3 மட்டும் **(ஈ) 3 மற்றும் 4 மட்டும்**

72. Covid 19 பரவலுக்குப் பிறகு "பெரிய தனியார்மயமாக்கல் உந்துதல்" உருவாகிய தொழிற்சாலைகளின் பெயர்

(அ) சிறுதொழில் நிறுவனம் **(ஆ) யூனிகார்ன்**

(இ) தனியார் தொழிலாளர் (ஈ) குழந்தை நிறுவனம்

73. இந்தியாவில் நகரமயமாக்கல் துரிதமாக காணப்பட்ட காலம்

(அ) 1901–1931 (ஆ) 1931–1961 **(இ) 1961–க்கு பிறகு** (ஈ) 1901–க்கு முன்பு

74. வேளாண் நடவடிக்கைகளுக்கு அதிக அளவில் நீர் தேவைப்படும் ஒரு பயிர்

(அ) பார்லி (ஆ) மக்காச்சோளம் **(இ) கரும்பு** (ஈ) கோதுமை

75. பரந்த இலைக்காடுகளின் இனங்களில் வருவது

(அ) டியோடர் (ஆ) ஃபிர் (இ) ஸ்புரூஸ் **(ஈ) ரோஸ்வுட்**

76. கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆறுகளில் "தென் இந்தியாவின் கங்கை" என்று அழைக்கப்படுவது எது?

(அ) காவேரி (ஆ) கிருஷ்ணா **(இ) கோதாவரி** (ஈ) நர்மதை

77. தமிழ்நாட்டின் கிழக்கு பகுதிகளுக்கு அதிக அளவிலான மழைப்பொழிவினை கொடுக்கும் காற்றுகள் எவை?

(அ) மேற்கத்திய காற்றுகள் (ஆ) தென்மேற்கு காற்றுகள்

**(இ) வடகிழக்கு வறண்டகாற்றுகள்** (ஈ) வடகிழக்கு குளிர்ந்த காற்றுகள்

78. சிவாஜி எங்கு கடற்படை தளத்தை நிறுவுற இருந்தார்?

(அ) சால்ஷெட்லே **(ஆ) கோலாபா** (இ) பேஸீன் (ஈ) கல்யாண்

79. சீக்கியர்களின் புனித தலமான அமிர்தரஸை நிறுவிய சீக்கிய குருவின் பெயரைக் குறிப்பிடுக:

(அ) குரு கோவிந்த் (ஆ) குரு நானக் **(இ) குரு ராம் தாஸ்** (ஈ) குரு தேக் பகதூர்

80. மராத்தியர் ஆட்சியில் நாட்டின் முக்கிய வருவாய் எதிலிருந்து பெறப்பட்டது?

**(அ) நிலம்** (ஆ) வணிகம் (இ) அபராதம் (ஈ) போக்குவரத்து

81. அக்பரின் ஆசிரியராக தேர்வு செய்யப்பட்ட பாரசீக அறிஞரின் பெயர்

**(அ) அப்துல் லத்தீப்** (ஆ) அப்துல் சலாம் (இ) அப்துல் சமது (ஈ) அப்துல் ரஹீம்

82. "பிரிகத் சம்ஹிதா" என்னும் நூலின் ஆசிரியர்
**(அ) வராகமிஹிரர்** (ஆ) தண்டின் (இ) புத்த குப்தர் (ஈ) அமர்சிங்

83. கூற்று (A): அலாவுதீனின் வலது சாரி தலைவர் சாபர்கான் மங்கோலியர்களால் கொல்லப்பட்டார்
காரணம் (R): இடது சாரி தலைவரான உலுக்கான் அவரை கைவிட்டு விட்டார்
(அ) (A) சரி (R) தவறு
(ஆ) (A) (R) இரண்டும் சரி
(இ) (A) தவறு (R) சரி
**(ஈ) (A) (R) இரண்டும் சரி (R), (A) யின் சரியான விளக்கம்**

84. பின்வருவனவற்றுள் சிந்து சமவெளி நாகரிகத்தின் துறைமுக நகரம் எது?
**(அ) லோத்தல்** (ஆ) ஹரப்பா (இ) களிபங்கன் (ஈ) லர்கானா

85. கீழ்கண்டவற்றை பொருத்துக:
(அ) ஆரியபட்டா 1. கணித மேதை
(ஆ) நாகர்ஜீனா 2. ஜைன புலவர்
(இ) சித்த சேனர் 3. புத்த புலவர்
(ஈ) வீர சேன சேவா 4. இலக்கண புலவர்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 4 | 1 | 3 | 2 |
| **ஆ.** | **1** | **3** | **2** | **4** |
| இ. | 1 | 2 | 3 | 4 |
| ஈ. | 4 | 3 | 2 | 1 |

86. தகவல் அறியும் உரிமைச் சட்டம் நடைமுறைக்கு வந்த ஆண்டு
(அ) 22 ஜீன் 2005 **(ஆ) 12 அக்டோபர் 2005** (இ) 15 ஜீன் 2005 (ஈ) 15 ஆகஸ்ட் 2005

87. மத்திய அரசாங்கத்தின் கீழ் வரக்கூடிய துறைகள் எது?
**(அ) வங்கித்துறை** (ஆ) விவசாயம் (இ) சிறைத்துறை (ஈ) பொது உடல்நலன்

88. கீழ்கண்டவற்றுள் லோக்சபா சபாநாயகர் தனது ராஜினாமாவை எவரிடம் அளிப்பார்?
**(அ) துணை சபாநாயகர்** (ஆ) குடியரசுத்தலைவர்
(இ) பிரதமர் (ஈ) சட்ட அமைச்சர்

89. 2005ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம் -------------- அட்டவணைகள் கொண்டதாகும்.
(அ) 5 பகுதிகள் (ஆ) 10 பகுதிகள் **(இ) 2 பகுதிகள்** (ஈ) 8 பகுதிகள்

90. கீழ்க்காணப்படும் சொற்களை அதன் அர்த்தத்துடன் பொருத்தவும்:
(அ) ஒத்திவைப்பு – அவையை நடத்த தேவையான உறுப்பினர் எண்ணிக்கை
(ஆ) குவாரம் – புது மக்களவை தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு கடைசியான பழைய மக்களவை அமர்வு
(இ) கங்காரு மூடல் – பாராளுமன்றத்தை காலவரையற்று ஒத்தி வைத்தல்
(ஈ) லேம்டக் அமர்வு – முக்கியமான உட்கூறுகளை மட்டும் விவாதிப்பது

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 3 | 1 | 2 | 4 |
| ஆ. | 1 | 3 | 2 | 4 |
| **இ.** | **3** | **1** | **4** | **2** |
| ஈ. | 2 | 3 | 4 | 1 |

91. தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005, இந்திய அரசியலமைப்பின் ---------- விதிக்கு ஒரு சிறந்த கட்டமைப்பை வழங்குகிறது.
(அ) விதி 9 **(ஆ) விதி19** (இ) விதி 29 (ஈ) விதி 30

92. மத்திய நுகர்வோர் பாதுகாப்பு குழு கூட்டம் வருடத்திற்கு எத்தனை முறை நடத்தப்பட வேண்டும்?
**(அ) ஒரு முறை** (ஆ) இரண்டு முறை
(இ) தேவை ஏற்படும்போதெல்லாம் (ஈ) ஒவ்வொரு மாதமும்

93. இந்திய அரசியலமைப்பு முகவுரை பற்றிய வாக்கியங்களை கவனிக்கவும்
1. ஜவஹர்லால் நேரு அவர்கள் இதனை "அரசியல் சாசனத்தின் அடையாள அட்டை" என்று கூறினார்.
2. இது அரசியல் சாசனத்தின் அதிகாரத்தை வெளிப்படுத்துகிறது.
3. இந்திய நாட்டின் தன்மையை வெளிப்படுத்துகிறது.
4. இந்திய அரசியல் சாசனத்தின் கொள்கைகளை வெளிப்படுத்துகிறது.
மேலே காணப்படும் வாக்கியங்களில் எது/எவை தவறானவை?
(அ) 1 மற்றும் 2 **(ஆ) 1 மட்டும்** (இ) 2 மட்டும் (ஈ) 3 மற்றும் 4

94. நிதி ஆயோக்கின் முதல் துணைத் தலைவர் யார்?
**(அ) அரவிந்த் பணகாரியா** (ஆ) V.K.சரஸ்வத் (இ) ராஜ்நாத் சிங் (ஈ) அருண் ஜெட்லி

95. இந்திய ரிசர்வ் வங்கியின் முக்கிய பணிகள்
1. பணம் வெளியிடுதல்.
2. பாதுகாப்புப் பெட்டகம்.
3. கடன் கடிதம்.
4. வங்கிகளின் வங்கி.
குறியீடுகள் மூலம் சரியான விடையை தெரிவு செய்க:
**(அ) 1 மற்றும் 4 சரியானவை** (ஆ) 2 மற்றும் 2 சரியானவை
(இ) 2 மற்றும் 3 சரியானவை (ஆ) 3 மற்றும் 4 சரியானவை

96. "மாநிலங்களுக்கு உடனடியாக கடன் நிவாரணம் வழங்குவதன் மூலம், மாநிலங்களின் எதிர்கால கடன் சுமை மிதமானதாக இருக்கும்" இது யாருடைய கூற்று?
(அ) Dr.மன்மோகன் சிங் **(ஆ) Dr.C.ரெங்கராஜன்**
(இ) Dr.ஸ்ரீவஸ்தவா (ஈ) T.R.பிரசாத்

97. பின்வருவனவற்றுள் எது வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் இல்லை?
(அ) ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் (REGP)
(ஆ) பிரதமர் வேலைவாய்ப்புத் திட்டம் (PMRY)
(இ) தேசிய வேலைக்கு உணவுத் திட்டம் (NFWP)
**(ஈ) ஐந்தன் திட்டம்**

98. இந்தியாவில் வறுமை பற்றிய புள்ளி விவரங்களைத் திரட்டும் நிறுவனம் எது?
(அ) திட்டக்குழு **(ஆ) NSSO (தேசிய மாதிரி ஆய்வு அலுவலகம்)**
(இ) CSO (மத்திய புள்ளியியல் அலுவலகம்) (ஈ) தேர்தல் ஆணையம்

99. கோவிட் தொற்றுக் காலத்தில் இந்தியப் பொருளாதாரத்தில் மிகுதியாக பாதிக்கப்பட்ட துறைகளை அடையாளம் காண்க:
1. MSME துறை.
2. விமானத்துறை.
3. சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறை.
4. தொலைத்தொடர்புத் துறை
(அ) 3 மற்றும் 4 மட்டும் (ஆ) 1 மற்றும் 2 மட்டும்
(இ) 1 மற்றும் 4 மட்டும் **(ஈ) 1, 2 மற்றும் 3 மட்டும்**

100. கீழ் குறிப்பிட்டதில், எது வேளாண் விலைக் கொள்கையின் முக்கிய நோக்கங்களில் குறிப்பிடாதது?
1. அதிக உற்பத்திக்கு தொழில் நுட்பத்தை உயர்த்துவது.
2. நிலப்பகிர்வுக்கு உதவுவது.
3. கொள்முதல் விலையை நிர்ணயம் செய்தல்.
4. பொதுப்பகிர்வு முறையை மேலாண்மை செய்தல்.
குறியீடுகள் மூலம் சரியான விடை காண்க:
(அ) 1 மட்டும் **(ஆ) 2 மட்டும்** (இ) 1, 2 மற்றும் 3 (ஈ) 1, 3 மற்றும் 4

winmeen.com